**தலைப்பு 282 – நீர்ப்பாசனத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 282 – நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 08 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

1.2 **கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. **கணக்குகள்**

2.1 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

நீர்ப்பாசனத் திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 13,397.22 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 13,198.16 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 199.06 மில்லியன் அதாவது 1.49 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| **செலவினம்** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதி ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | |
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| மீண்டுவருவன | 2,848.87 | 2,821.11 | 27.76 | 0.97 |
| மூலதனம் | 10,548.35 | 10,377.05 | 171.30 | 1.62 |
| மொத்தம் | **13,397.22** | **13,198.16** | **199.06** | **1.49** |

**(ஆ) வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் இருந்து வழங்கியிருந்த நிதியேற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு கருமங்களுக்காக திணைக்களத்திற்கு 2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 4 திணைக்களங்களில் இருந்து கூட்டுத்தொகை ரூபா 2,545 மில்லியன் நிதியேற்பாடுகள் வழங்கியிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அவற்றில் ரூபா 1,504 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கியிருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 1,041 மில்லியன் அதாவது 40.90 சதவீத நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 28201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 143.78 | 137.37 | 115.00 | 136.84 | 500.00 | 356.86 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழ் 05 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 556.29 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்குகளின் இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0022/000 | 13.15 |
| 6000/0000/00/0001/0041/000 | 3.24 |
| 6000/0000/00/0016/0008/000 | 258.12 |
| 6000/0000/00/0018/0010/000 | 279.92 |
| 6000/0000/00/0013/0036/000 | 1.86 |
| மொத்தம் | **556.29** |

2.4 **கணக்காய்வு அவதானிப்பு**

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை**

திணைக்களத்தினால் நிதிப் பிரமாணங்கள் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

**3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

அறிவித்துள்ளவாறு திணைக்களத்திற்குரிய நிதிப் பிரமாணங்கள் 272(2) இன் பிரகாரம் அலுவல்கள் பூர்த்தி செய்யப்படாத ரூபா 711,312 தொகை பெறுமதியான 02 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் காணாமல் போயிருந்தன.

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**3.3.1 பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 14 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதற்காக போதியளவான கட்டுநிதிகள் திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அந்த 14 செலவு விடயங்களில் காணப்பட்ட தேறிய நிதியேற்பாடுகளில் 6 சதவீதம் முதல் 61 சதவீதம் வரையான வீச்சு அளவுகளின் நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 05 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 340,000,000 இற்கான மொத்த நிதியேற்பாடுகளும் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன. செயற்படுத்த முடியாத செயற்திட்டங்களுக்கு நிதியேற்பாடு செய்யப்பட்டு அவை வேறு செயற்திட்டங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

**3.3.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளைப் பயன்படுத்தல்**

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் கிடைத்திருந்த நிதியேற்பாடுகள் ரூபா 675,812,469 தொகை அதாவது 60 சதவீதம், நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சில் இருந்து கிடைத்திருந்த ரூபா 353,768,084 தொகை அதாவது 26 சதவீதம், வனசீவராசிகள் அபிவிருத்தித் திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 4,110,630 அதாவது 94 சதவீதம், தேசிய மிருகக் காட்சிச்சாலைத் திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 3,199,477 தொகை அதாவது 33.5 சதவீதம் மற்றும் விவசாயத் திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 4,020,150 தொகை அதாவது 100 சதவீதம் உரிய கருமங்களை மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்படாத காரணத்தினால் சேமிக்கப்பட்டிருந்தது.

**3.4 பொது வைப்புக் கணக்கு**

02 வருடங்களை மிகைத்துள்ள (காணி வைப்புக்கள் தவிர) கூட்டுத்தொகை ரூபா 39,904,408 இற்கான 08 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.5 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

விடய இலக்கம் 28201 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,995,956 ஆகக் காணப்பட்டதுடன் அது 1 வருடம் முதல் 21 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்யும் பின் தொடர் நடவடிக்கை பலவீன நிலையில் இருந்தது.

(ஆ) அங்கத்தவர் கடன் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள தனிப்பட்ட மீதிகளின் பெறுமதி மற்றும் இணக்கக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட தனிப்பட்ட மீதிகளின் பெறுமதி என்பவற்றுக்கிடையே ரூபா 977,250 வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(இ) 2014 ஆண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது ஓய்வுபெற்ற 14 உத்தியோகத்தர்களிடமிருந்து திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 345,414 தொகையான கடன் மீதி 2015 திசெம்பர் 31 திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**உள்ளகக் கணக்காய்வு**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிரந்தர பதவியணி 6,029 இனை நீர்ப்பாசனத் திணைக்களம் கொண்டிருந்தது. தலைமை அலுவலகம் மற்றும் நாடு பூராகவும் பரவியிருக்கும் 14 வலய அலுவலகங்களின் மூலம் திணைக்களக் கருமங்கள் மேற்கொண்டிருந்தது. திணைக்களம் ஆக்கியுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் உள்ளகக் கட்டுப்பாட்டு முறை மற்றும் திணைக்களம் அமுல் நடத்தும் பல்வேறு செயற்திட்டங்களின் சிக்கனத் தன்மை, செயற்திறமை மற்றும் வினைத்திறன் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வின் பணிப்பொறுபபை மேற்கொள்வதற்கு 19 உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 08 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. மேலும் உள்ளகக் கணக்காய்வு பதவியணியின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது போதியளவு பயிற்சி வழங்கலை வழங்குவதற்கும் திணைக்களம் தவறியிருந்தது.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்திற்குச் சொந்தமாகக் காணப்படும் 39 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை உரிய முறையில் பராமரிக்காமையினால் அவை சிதைவடைந்து காணப்பட்டது. மேலும் 118 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் உடைந்த நிலையில் காணப்படுவதினால் மற்றும் வதிவதற்கு உத்தியோகத்தர்கள் முன்வராமை போன்ற காரணத்தினால் நீண்ட காலமாக அவை விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) பதவிய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்திற்குரிய 27 துப்பாக்கிகள், 83 எஸ்.ஜீ. தோட்டாக்கள் மற்றும் 272 ரைபல்கள் 25 வருடங்களை விட மிகையான காலம் முழுவதும் பயன்படுத்தியிருக்காததுடன் அவற்றை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) வெளி சாராருக்கு வழங்கியிருந்த சொத்துக்கள்**

திணைக்களத்திற்கு சொந்தமான உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் முறைசாரா விதமாக வெளிசாராருக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு.

(i) திணைக்களத்திற்கு சொந்தமான 16 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் அங்கீகாரம் அற்ற நபர்கள் வதிவதாக இனங்கண்டிருந்த போதிலும், அவர்களை அகற்றுவதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) அரசாங்க திணைக்களங்கள் மற்றும் வேறு அரச நிறுவனங்களுக்கு 42 உத்தியோகபூர்வ வாசஸ்தங்கள் முறைசாரா விதமாக வழங்கப்பட்டிருந்தது.

**(இ) வேறு நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்கள் முறை சாரா விதமான பயன்படுத்தல்**

வேறு நிறுவனங்களில் இருந்து கிடைத்திருந்த 10 வாகனங்கள் முறையான அங்கீகாரம் இன்றி அனுராதபுர வலய நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தாலும் பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தன.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாமல் ஒரு வருடத்தை விட குறைவான காலம் முதல் காணப்பட்ட ரூபா 2,342.76 மில்லியனிற்கான பொறுப்புக்கள் காணப்பட்டது. நிதிப் பிரமாணங்கள் 94(1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 19 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் இருந்து பயன்படுத்திய பின்னர் மீதியினை மிகைத்து ரூபா 2,060.33 மில்லியன் பொறுப்புக்கள ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**3.8 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை | |
| XII ஆம் அத்தியாயத்தின் 1 ஆம் பிரிவு | அனுராதபுர வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்காளர் 2015 ஆண்டின் போது அங்கீகாரம் இன்றி 130 நாட்கள் கடமைக்கு சமுகமளித்திருக்கவில்லை. அக் காலப் பகுதியில் விடுமுறை நாட்கள் என விடுமுறைகள் பதிவேட்டிலும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த கணக்காளர் 100 நாட்களில் உள்வருதல் கையொப்பமிட்டிருந்த போதிலும் வெளிச்செல்லும் போது வெளிச் செல்லல்களுக்காக கையொப்பமிட்டிருக்க வில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 104 | அம்பாறை நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் 2009 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை காலப் பகுதியில் ஏற்பட்டிருந்த 15 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு அசாதாரணமாக தாமதப்படுத்தப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப் பிரமாணம் 262 | அக்கரைப்பற்று பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தினால் காசோலைகள் எழுதப்படாமல் 2015 திசெம்பர் 30 திகதி 20 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் காசேட்டில் பதியப்பட்டிருந்தன. |
| (iii) நிதிப் பிரமாணம் 316 | அக்கரைப்பற்று பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்திற்கு சொந்தமான பணம், பாதுகாப்பான இரும்பு பெட்டியில் போடப்படாமல் விடயத்திற்கு பொறுப்பான முகாமைத்துவ உதவியாளரின் மேசை இலாச்சியில் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்தது. |

**3.9 உள்நாட்டு நிதியளித்தல் மூலம் செயற்திட்டங்கள் அமுல்படுத்துதல்**

செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்படல், செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்படல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்படல்**

திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அச் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| **செயற்திட்டம்** | **மதிப்பீட்டுக் கிரயம்** | **ஆரம்பிக்காமைக்கான காரணம் சுருக்கமாக** |
|---|---|---|
| | ரூபா. | |
| பெதியாகொட நீர்ப் பம்பி நிலையம் நிர்மாணித்தல் | 50,000,000 | அங்கீகாரமற்ற வதிவோர்களை அகற்றுவதற்கு முடியாமை. |
| எல்லபொதான அணைக்கட்டு | 25,000,000 | காணி கைப்பற்றல் விடயங்கள் முடிவடைந்திருக்காமை. |
| எல்லே வெவ நீர்த்தேக்கம் | 30,000,000 | மீள்குடியேற்றம் மற்றும் காணி கைப்பற்றல்களில் சிக்கல்கள் காணப்படல். |
| ரேகம – கித்துள் நீர்த்தேக்கம் | 60,000,000 | காணிச் சிக்கல்கள் மற்றும் தொழிநுட்பவியல் சார் சிக்கல்கள் காணப்படல். |

**(ஆ) செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்படல்**

திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | 2015 திசெம்பர் 31 திகதி வரை செலவு | கைவிடுவதற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா. | | ரூபா. | |
| தெம்பரஆர போசிக்கும் வாய்க்கால் நிர்மாணித்தல் | 31,635,771 | 2010 | 18,406,471 | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| தலகொல வெவ புனர்நிர்மாணம் செய்தல் | 2,685,354 | 2011.12.21 | 2,059,773 | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**3.10 வங்கிக் கணக்குகளை நெறிப்படுத்துவதில் குறைபாடுகள்**

**(அ) வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்படாமை**

2015 ஆண்டிற்கான 06 வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகங்களில் 07 வங்கிக் கணக்குகள் தொடர்பாக வங்கி கணக்கு இணக்கக் கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பித்திருக்கவில்லை.

**(ஆ) வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிப்பதில் நீண்ட தாமதம்**

அனுராதபுரம் மற்றும் அம்பாறை வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகங்களில் வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நீண்ட தாமதம் அவதானிக்கப்பட்டது.

**3.11 சிக்கல் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் சிக்கல் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்டன.

களஞ்சியக் காப்பாளர் ஒருவரினால் 2002 ஆண்டிற்கு முன்னர் சேவைக் காலத்தில் நடைபெற்றிருந்த அளவை உபகரணங்கள் பற்றாக்குறையின் பெறுமதி ரூபா 4,313,239 தொகையென அறிவிக்கப்பட்டிருந்தது. அவ் உத்தியோகத்தர் நீர் சக்தி பிரிவில் கடமையாற்றி விட்டு 2002 மே 09 ஆந் திகதி கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டிருந்தார். இப் பற்றாக்குறை சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் ரூபா 411,051 தொகை மாத்திரம் அவ் உத்தியோகத்தரிடம் அறவிடப்பட்டிருந்தது. 2015 ஆகஸ்ட் 31 திகதி அளவில் நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் 03 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆரம்ப விசாரணை அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது. 13 வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்டிருந்த இந்த பற்றாக்குறையை அறவீடு செய்வதற்காக முறையான பின் தொடர் நடவடிக்கை ஒன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பற்றாக்குறையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

**3.12 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்**

**போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

தற்காலிக, அமைய(நாளாந்த), பிரதியீட்டு, ஒப்பந்த அல்லது உதவி அடிப்படையில் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்கள் என குறிப்பிட்டு 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாம் 1,755 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 திகதி அளவில் அந்த 1755 ஊழியர்களில் 230 பேர் பல்வேறு காரணங்களினால் பதவிகளில் இருந்து விலகியிருந்தனர். 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற அவ்வாறு சேர்க்கப்பட்ட 1525 ஊழியர்கள் இருந்தனர். அந்த ஊழியர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மேற்கூறிய சுற்றறிக்கையின் முதலாவது பந்தியின் பிரகாரம் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டியது திணைக்களத்திள் சேர்க்கப்பட்டு அது வரையிலும் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற நிலையில் காணப்படும் ஊழியர்களுக்கு மாத்திரமெனினும் முறையான நியமனக் கடிதத்தின் மூலம் சேவைக்கு சேர்கப்பட்டமை உறுதிப்படுத்தப்படாத ஊழியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தன. அவர்களில் அனேகமானவர்கள் குறித்த வேலை ஒன்றிற்கு

என அடிப்படையில் (ad hoc) சேவையில் ஈடுபடுத்தியிருந்தவர்களாகக் காணப்பட்டமையால் மேற்கூறிய சுற்றறிக்கையின் மூலம் அவ் ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளல் அடங்குவதில்லை எனவும் அவர்களுக்காக நிரந்தர நியமனம் வழங்குவதற்கு முடியாது எனவும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மேற்கூறிய சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் 2014 அக்தோபர் 24 திகதியில் உள்ளவாறு தொடர்ச்சியாக 180 நாட்கள் சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருக்காத 16 ஊழியர்களுக்கு அந்த குறைபாடு தொடர்பாக கவனம் செலுத்தாமல் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்ததென தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(இ) 2013 ஜனவரி 30 ஆந் திகதிய 03/2013 இலக்க (நிருவாகம் 04) இலக்க நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் சேர்க்கப்டுகின்ற அனைத்து குறித்த வேலைக்கான ஊழியர்கள் உச்ச அளவு 05 மாத சேவைக்கு பின்னர் சேவை துண்டிக்கப்பட்டிருந்தது. அவ்வாறான ஊழியர்களுக்கு மேற்கூறிய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் தொடர்ச்சியான சேவைக் காலம் காணப்பட்டதென கணித்து நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

### 3.13 நிதி மோசடித் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) போலி நியமனங்கள்

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகங்களில் களஞ்சிய உதவியாளர்கள் மற்றும் 15 தொழிலாளர் பதவிகளுக்கு நியமனங்கள் வழங்கியிருந்த நியமனக் கடிதங்களில் காணப்படும் கையொப்பங்கள் முன்னைய நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் இணங்கியிருக்கவில்லை எனவும் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் இவ்வாறான நியமனங்கள் வழங்குதல் நடைபெற்றிருக்கவில்லை எனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

#### (ஆ) நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்காக பொய்யான ஆவணங்கள் தயாரித்தல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 நவம்பர் 12 திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் தொடர்ச்சியாக 180 நாட்கள் திருப்திகரமாக சேவைக் காலமொன்றினை பூர்த்தி செய்துள்ள ஊழியர்கள் மாத்திரம் நிரந்தரப்படுத்தப்பட வேண்டும். எனினும் ஹிரியல, நாச்சியாதுவ, வாரியபொல, இங்கினிமிட்டிய மற்றும் கண்டி பிராந்திய நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகங்களில் மற்றும் கொழும்பு தலைமை அலுவலகத்தில் குறிப்பிட்ட நாட்களைப் பூர்த்தி செய்யாத 04 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. இதற்காக போலியான தகவல்கள் அடங்கிய விண்ணப்பங்கள், நடத்தை குறிப்புக்கள் தயாரித்தல் மற்றும் போலி மருத்துவ அறிக்கை, நோய் தீர்மானித்தல் சிட்டைகள் தயாரித்திருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ii) கடமையாற்றிய நாட்களின் எண்ணிக்கை, செலுத்திய சம்பளம், செக்ரோல் இலக்கம் ஆகிய தகவல்களை போலியாக உட்படுத்த நடத்தைக் குறிப்புக்கள் மற்றும் விண்ணப்பப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு திணைக்களத்தில் ஒரு நாளேனும் சேவை செய்திருக்காத 07 ஊழியர்களுக்கு பதவிய மற்றும் ஹிரியால பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்திலும் மற்றும் கொழும்பு தலைமை அலுவலகத்திலும் சேவை நிரந்தரப்படுத்தப்பட்டிருந்ததாக தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(iii) தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியின் கீழ் புத்தளம் மற்றும் சிலாபம் மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்ட (திணைக்களத்தில் மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்பட்ட) உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் தொழிநுட்பவியல் வேலை பரிசோதகர் ஒருவர் என ஊழியர் ஒருவரை 06 மாதங்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தி செயற்திட்ட நிதியத்தில் இருந்து சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. அந்த ஊழியர் திணைக்கள ஊழியர் ஒருவரென போலி நியமனக் கடிதம் தயாரித்து 2014 நவம்பர் 12 திகதி 25/2014 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தில் தொழில்நுட்பவியல் உதவியாளர் பதவியில் சேவை நிரந்தரத் தன்மை வழங்கப்பட்டிருந்தது.

### 3.14 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மூன்று நிதி மோசடிச் சம்பவங்களில் இருந்து ரூபா 301,908 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. அவற்றில் ரூபா 261,777 தொகைக்கான 02 மோசடிகள் நடைபெற்று 19 வருடம் மற்றும் 36 வருட காலம் கடந்திருந்தது. 2014 ஆண்டின் போது ஏற்பட்ட பண மோசடியில் மேலும் ரூபா 40,131 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டத்தினை அறவீடு செய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.15 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் அடங்கியிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக்காட்டிய மோசடிகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக திணைக்களத்தால் சரிசெய்திருக்காத பந்திகள் தொடர்பாக கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்பு | | |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | **தொடர்புடைய விடயம்** |
| 2006 | 3.1(அ) | சுகலாதேவி குளச் செயற்திட்டத்தின் கீழ் பொறியியல் உதவியாளர் ஆற்றிய மோசடி |
| 2006 | 7.2அ) | வெஹெரகல செயற்திட்டத்திற்காக கொங்கிரீட் கலவை இயந்திரம் ஒன்று பெறல் |

## 3.16 முகாமைத்துவப் பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1946 இன் 32 ஆம் இலக்க நீர்ப்பாசன கட்டளைச் சட்டம் மற்றும் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை தற்காலத்திற்கு ஏற்றவிதமாக திருத்திக் கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2013 ஆண்டின் போது நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதவியணியினர் சீராக்கல் செய்த பின்னர் மீள்கட்டமைத்தல் தொடர்பாக சரியான அமைப்பு வரைபடம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. திணைக்களத்தில் 42 சிவில் மற்றும் இயந்திரப் பணிப்பாளர் பதவிகளுக்காக அவ் ஒவ்வொரு பதவிக்கான கடமை அட்டவணை கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

(இ) கும்புக்கன் ஓயா நீர்தேக்கச் செயற்திட்டம் நீர்மாணிப்பதற்காக 2012 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை ரூபா 525,000,000 இற்கான நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதும், அதற்கான சாத்தியவள ஆய்வுமற்றும் சுற்றாடல் ஆய்வு என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திணைக்களத்திற்குச் சொந்தமான 39 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை ஒழுங்கு முறைப்படி பராமரிக்காமையால் அழிவு நிலை அடைந்திருந்தது. 42 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் படை, பொலிஸ் மற்றும் வேறு நிறுவனங்களின் அலுவலகங்கள் அமைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றைத் தீர்ப்பதற்காக திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் 09 பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களைச் சேர்ந்த 16 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் அங்கீகாரம் இன்றிய வதிவோர்கள் உரித்தாக்கிக் கொண்டுள்ளனர்.

(உ) நீர்ப்பாசன கால்வாய் ஒன்று உடைந்திருந்ததன் காரணமாக ஏற்பட்டிருந்த வெள்ளத்தின் காரணமாக உடைந்திருந்த வீடு ஒன்றிற்கு பதிலாக அம்பாறை வீரகொட பகுதியில் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் ஒன்று விவசாயி ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) வேறு நிறுவனங்களில் இருந்து பெற்றிருந்த 10 வாகனங்கள் அனுராதபுர வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம் மற்றும் பிராந்திய பொறியியலாளர் அலுவலகத்தினால் பயன்படுத்திய போதிலும் அவ் வாகனங்களை திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) அனுராதபுர நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தைச் சேர்ந்த வாகனங்களைப் பதிவு செய்வதற்காக பதிவேடு ஒன்று தயாரித்திருக்காததுடன் வாகனப் பராமரிப்பு தொடர்பான கோவைகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. மாதாந்த ஓட்ட அட்டவணைகள் முழுமையற்ற விதமாக தயாரிக்கப்பட்டதுடன் அவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தெபரஆர போஷிக்கப்படும் அருவி நிர்மாணிப்பதற்காக 2010 ஆண்டின் போது 04 ஒப்பந்தக்காரர்களுடன் ரூபா 31,635,771 தொகைக்கு 9 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. எனினும் அந்த நிர்மாண வேலைகள் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரை பூர்த்தி செய்திருக்கவில்லை. ஒப்பந்தக்காரருக்கு வழங்கியிருந்த முற்பணத்தில் ரூபா 2,749,000 தொகை மீண்டும் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 திகதி வரை அப் பணத்தை மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. குறிப்பிட்ட நிர்மாண வேலைகளின் கணக்கிடப்பட்ட பெறுமதியாகிய ரூபா 18,406,471 இற்கான செலவு பயனற்ற செலவாகியுள்ளது.

(ஐ) தல்கொலவெவ புனர்நிர்மாணம் செய்வதற்காக 2011 திசெம்பர் 21 திகதி தனியார் நிறுவனம் ஒன்றுடன் ரூபா 2,685,354 இற்கான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 2,059,773 இற்கான வேலைப் பகுதி மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் முழு வேலைகளையும் பூர்த்தி செய்வதற்காக 2016 ஜூன் 30 திகதி வரை திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

(ஒ) 946 மீற்றர் நீளமான கிம்புலஓடே நீர்ப்பாசன பாதையை அபிவிருத்தி செய்வதற்கு ஒரு மதிப்பீடு தயாரிப்பதற்கு இயலுமாக இருக்கும் போது இரண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. 30 மீற்றர் நீளம் இரண்டு மதிப்பீடுகளிலும் உட்பட்டிருந்தமையால் மதிப்பீட்டு செலவு ரூபா 52,439 இனால் அதிகரித்திருந்தது. வேலை ஆரம்பிப்பதற்கு முன்னர் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும் எனினும் 2015 ஜூன் மாதத்தில் மேற்கூறிய செயற்திட்டதின் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மதிப்பீடு தயாரித்தல் 2015 செப்தெம்பர் மாதம் வரை தாமதப்படுத்தப்பட்டிருந்தது. மதிப்பீட்டின் பிரகாரம் தரையின் மேல் பகுதியில் உள்ள மண் 4.76 மீற்றர் அளவு மண் அகற்றப்பட வேண்டும். எனினும் 04 மீற்றர் அளவு மாத்திரம் அகற்றப்பட்டிருந்தது. மேலும், மதிப்பீட்டின் பிரகாரம் பாதையின் அகலம் 8 மீற்றர்களாகும். எனினும் வெளிக்கள பரிசோதனையின் போது பாதையின் சாரசரியான அகலம் 7 மீற்றர்களை விட குறைவாகக் காணப்பட்டது.

(ஓ) கலமுன அணைக்கப்பட்டு நிர்மாணிப்பதற்காக பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளரினால் அங்கீகரிக்கும் எல்லையான ரூபா 2,000,000 தொகையினை மிகைத்து ரூபா 2,695,000 இற்கான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் தொடர்பாக ஒப்பந்தக்காரரை தெரிவு செய்வதற்காக பெறுகைகள் நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) பல்லயடியான தென்பகுதி வெள்ளத்தின் காரணமாக கரைந்து சென்றிருந்த 139 மீற்றர் பகுதியை திருத்த வேலை செய்வதற்கு மதிப்பீடு தயாரிக்கும் போது 9 மீற்றர்கள் குறைவாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 750,000 தொகைக்கான அதிகாரமளிக்கப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட திட்டம் நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருவில்லை. இவ் விடயத்திற்காக 09 மாதகாலம் செலவிடப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை போடப்பட்டிருந்த மண்ணில் பெரும் பகுதி கழுவிச் செல்லப்பட்டிருந்தது. பாதைக்கு போடப்பட்ட மண் நெருக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் தரம் இல்லாத மணல் கலந்துள்ள மண் பாதைக்கு போடப்பட்டிருந்தது.

### 3.17 மனித வள முகாமைத்துவம்

#### (அ) அங்கீகரிப்பட்ட பதவியணியினா் மற்றும் உள்ளவாறான பதவியணியினர்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினர் 6,453 மற்றும் உள்ளவாறான பதவியணியினர் 5,417 என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஊழியர்களின் வகைகளின் படி தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 1036 வெற்றிடங்கள் காணப்பட்டது. 2015 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் வழங்கியிருந்த நிதியேற்பாடுகளைப் பயன்படுத்தாமல் சேமிக்கப்பட்டிருந்த போதிலும் அச் சேமிப்பு தொடர்பாக பதவியணி வெற்றிடங்கள் காணப்பட்டமை தாக்கமளித்திருக்கவில்லை. அதன் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மிகை மதிப்பீடு ஒன்று என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) சேர்க்கப்பட்டிருந்த 612 மிகை பதவியணியினர் தொடர்பாக முறையான அங்கீகாரம் ஒன்றினை பெற்றுக்கொள்வதற்காக திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 2014 நவம்பர் 12 திகதிய 25/2014 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் நிரந்தர நியமனம் வழங்கியிருந்த பதவியணியினர் எண்ணிக்கை 1,686 என முகாமைத்துவச் சேவை திணைக்களத்திற்கு அறிவித்திருந்த போதிலும் 2016 ஜூன் மாதத்தில் கணக்காய்விற்கு வழங்கியிருந்த அறிக்கையில் சேர்க்கப்பட்ட பதவியணியினர் 1755 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. 2016 ஜூன் 30 திகதி வரையும், இந்த பதவியணியினரை திணைக்களத்தின் பதவியணியில் உட்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் சில ஊழியர்கள் சமர்ப்பித்திருந்த பிழையான தகவல்கள் உண்மையானவைகள் என உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தப்பட்டமையினால் தகைமை இல்லாத ஊழியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

**(ஆ) முறைசாரா விதமாக வேறு சாரருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

---

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் வெளி சாராருக்கு முறை சாரா விதமாக விடுவிக்கப்பட்டிருந்த மனித வளம் பற்றிய விபரம் ஒன்று 2016 ஏப்ரல் 05 திகதிய IEN/A/SA/16/15 இலக்க கடிதத்தின் மூலம் வினவி இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை அதற்கு பதில் அனுப்பியிருக்கவில்லை. எனினும் 2014 திசெம்பர் 31 திகதி வரை திணைக்களத்தின் 09 ஊழியர்கள் முறை சாரா விதமாக வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.